**வாசிக்க**: **எசேக்கியல்** 37:1-14

**உலர்ந்த எலும்புகளில் உயிர்வருமா**..?

கர்த்தருடைய கை எசேக்கியா மேல் அமர்ந்து, கர்த்தர் அவனை ஆவிக்குள்ளாக்கி வெளியே கொண்டுபோய், எலும்புகள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்கின் நடுவில் நிறுத்தி,

அவனை அவைகளின் அருகே சுற்றி நடக்கப்பண்ணினார், இதோ, பள்ளத்தாக்கின் வெட்டவெளியிலே அந்த எலும்புகள் மகாதிரளாய் கிடந்தது, மிகவும் உலர்ந்ததுமாயிருந்தது. கர்த்தராகிய ஆண்டவர் எசேக்கியாவிடம் இந்த எலும்புகளை நோக்கி: இதோ, நான் உங்களுக்குள் ஆவியைப் பிரவேசிக்கப்பண்ணுவேன், அப்பொழுது உயிரடைவீர்கள். நான் உங்கள்மேல் நரம்புகளைச்சேர்த்து, உங்கள்மேல் மாம்சத்தை உண்டாக்கி, உங்களைத் தோலினால் மூடி, உங்களில் ஆவியை கட்டளையிடுவேன், அப்பொழுது நீங்கள் உயிரடைந்து, நான் கர்த்தர் என்று அறிந்து கொள்வீர்களென்று உரைக்கிறார் என்று சொல்ல சொன்னார்.

எனக்குக் கற்பிக்கப்பட்டபடி நான் தீர்க்கதரிசனம் உரைத்தேன், அப்பொழுது ஆவி அவர்களுக்குள் பிரவேசிக்க, அவர்கள் உயிரடைந்து, காலூன்றி, மகா பெரிய சேனையாய் நின்றார்கள். மறுபடியும் நான் உங்களை உங்கள் தேசத்தில் வைப்பேன், அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள், இதைச் சொன்னேன், இதைச் செய்வேன் என்று கர்த்தர் உரைக்கிறார் என்று சொல் என்றார்.

**கேள்வி**:

இந்த உலர்ந்த எலும்புகளில் உயிர்வரும் தரிசனம் மூலம் இந்நாட்களின் வாழும் அவர் பிள்ளைகளுக்கு என்ன கற்று கொடுக்கிறார்..?

**பதில்**:

பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்கள் கட்டளைகள் எல்லாவற்றையும் புதிய ஏற்பாட்டின் வெளிச்சத்திலேயே படித்தால் மட்டுமே அதன் பலனை இந்நாட்களில் வாழ்பவர்கள் புரிந்து கொள்ளமுடியும். இங்கே இரண்டு காரியங்கள் கூறப்படுகிறது. பள்ளத்தாக்கில் திரளான எலும்புகள், மிகவும் உலர்ந்திருந்தன.

1) திரளான எலும்புகள் - கர்த்தரை அறிந்த ஒரு பெரிய கூட்டம் உயிரிழந்து போயிருக்கிறது. அதாவது விசுவாசத்தில் பின்வாங்கி பாவத்தில் விழுந்து மறுபடியும் அடிமைதனத்தில் விழுந்த கூட்டம் பெரிய கூட்டம்.

2) மிகவும் உலர்திருந்தன - மரித்து அநேகநாட்களானபடியால் மாமிசமெல்லாம் அழுகி அழிந்து போய் எலும்புகள் உலர்ந்திருந்தன. நம்பிக்கையே இல்லாத அளவிற்கு தேவஜனங்களுடைய வாழ்க்கை நாசமாகியிருந்தது.

இந்த சூழ்நிலையிலும் கர்த்தருடைய வார்த்தையும் அவருடைய ஆவியானவரும் எலும்புகளில் வரும் போது அவை உயிரடைந்தது. அருமையான தம்பி தங்கச்சி ஒருவேளை நீ தேவனை விட்டு தூர போய் அநேக நாட்களாகியிருக்கலாம். உன் ஆவிக்குரிய வாழ்க்கையில் வார்த்தையாகிய கிறிஸ்தவும், பரிசுத்த ஆவியானவரும் வந்தால் நீ மறுபடியும் முன் போல தேவனுக்காக உயிரோடு எழும்ப முடியும். இதை உனக்கு தெரிந்த பின்வாங்கி போன நபர்களுக்கும் சொல்லி நம்பிக்கை தருவாயா...?

இப்போதும் ஆண்டவரே, நான் எதற்கு எதிர்பார்த்திருக்கிறேன்? நீரே என் நம்பிக்கை. சங்கீதம் 39 :7

**ஜெபம்**

ஜீவனின் அதிபதியாகிய கர்த்தாவே! உமக்கு ஸ்தோத்திரம். ஆண்டவரே